**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**

O.S. No. 364/2020

Deposition of PW3 witness of Plaintiff/Petitioner/ Defendant /Respondent Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X 1872 on the 29th day of October 2024.

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ஜெகன்ராஜ் | | Caste | : |
| Father / Husband's Name | : குப்ப பிள்ளை | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**<u>முதல் விசாரணை</u> :–**

நான் ஸ்டேட் வங்கி திருவரம்பூர், திருச்சியில் கிளை மேலாளாராக உள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததால் நான் நீதிமன்றம் இன்று வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை நான் எடுத்து வந்துள்ளேன். ஆறுமுகத்தின் வங்கி கணக்கு எண். 32066558075. இது சேமிப்பு கணக்கு ஆகும். இது தவிர ஆறுமுகத்திற்கு வேறு ஒரு வங்கி டெபாசிட் கணக்கு இருந்து அது முடிக்கப்பட்டுவிட்டது. அந்த டெபாசிட் கணக்கு எண். 35553609116. அது 27.03.2019 அன்று முடிக்கப்பட்டது. மற்றொரு நகை கடன் 34321086629. அது 20.10.2015 ல் முடிக்கப்பட்டது. மற்றொரு நகை கடன் 35298529035. அது 14.06.2016 ல் முடிக்கப்பட்டது. சேமிப்பு

கணக்கில் 20.07.2020 க்கு பின்பு பரிவர்த்தனை நடந்துள்ளது. ATM மூலமாக 25.07.2020 ல் ரூ. 20,000/- எடுக்கப்பட்டுள்ளது. 26.07.2020 ல் ரூ. 20,000/- மற்றும் ரூ. 10,000/- மற்றும் ரூ. 10,000/- ATM மூலமாக எடுக்கப்பட்டது. 27.07.2020 ல் நான்கு முறை தலா ரூ. 10,000/- ATM மூலமாக எடுக்கப்பட்டது. அந்த சேமிப்பு வங்கி கணக்கில் நிலுவை தொகையாக ரூ. 3,22,392.38/- உள்ளது. மேற்படி சேமிப்பு கணக்கின் விவரம் உண்மை நகல் **சா.சா-3** ஆகும். டெபாசிட் மற்றும் இரண்டு நகை கடன்கள் தொடர்பான கணக்கு விவரங்கள் விவரம் உண்மை நகல்கள்(3 எண்ணிக்கை) **சா.சா-4 வரிசைகள்** ஆகும்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டு அது பதிவு செய்யப்பட்டது.

ஒம்/- L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.